பாயும்வெவ்விடையினுனேபாத்திரனல்லனுகில். (௧)

ஆச்சரியங்களானவறுவகைக்குணங்களோடே
சாச்சுதமாகநின்றுசகலசற்குணமும்பெற்றுப்
பூச்சியமானமேலோர்புகழ்ந்திடும்பகவற்சத்த
வாச்சியனுமோவன்றோவென்பதுவகுத்துச்சொன்னான். (௨)

அரியமாமறைமானச்சொற்கழகுறநகைத்துமின்னே
இரவலாபரணத்தைப்பூணுமிடமக்கிலையந்திருந்ததென்னத்
தெருவினிற்குலாவுவாரோபோற்சிவனையும்பகவானென்றாய்
உரைசெயப்புதுமைதன்னையுள்ளவாறறிதியென்றான். (௩)

அம்மொழியமையக்கேட்டவாகமவல்லிமுக்கட்
செம்மலேபனையதேவேசிறந்திடும்பகவானென்னும்
மெய்ம்மைநாமுனக்கொப்பாகவிரித்தபின்மிகைநீசொன்ன
இம்மொழியுனக்கேயன்றோவென்னமேலியம்பலுற்றான். ()

பகவனென்கின்றசொற்குப்பயன்பரிபூரணமான
சகலயிச்சொரியம்வீரஞ்சம்பதைகீர்த்திஞானம்
மகிமைவைராக்கியமென்னுமங்கலகுணங்களிந்தத்
தகைபெறுகுணங்களைக்கன்றனக்குளாதன்மைநீகேள் (௫)

அரியவிச்சுரசத்தத்தாலயிச்சொரியத்தைச்சொல்லும்
விரவுசந்திரசத்தத்தால்வீரியம்விரித்துக்கூறும்
மருவுறுசுருவசத்தம்வரம்பிலாஞானமாகும்
கிரமமாஞ்சிவசத்தத்தாற்கீர்த்தியைக்கிளத்துமன்றே. (௬)

மற்றுகாமாரிசத்தமதித்தவைராக்கியமோடும்
தன்னிற்சிரேட்டசத்தஞ்சம்பதைதன்னைச்சாற்றும்
இன்னசத்தத்தாலேயெண்ணியகுணங்களாறும்
கன்னிமியார்பாகனாங்கண்ணுதற்குள்ளதாமே. (௭)

நிகழுமிக்குணங்களன்றிநியமனந்திருநிசிட்டி
தருதவம்பொறுமைசாந்தஞ்சத்தியந்தருமமென்னும்
அகணிதகுணங்களெல்லாமவனியல்பாகையாலே
பகவனென்றுரைக்குநாமம்பசுபதிதனதேயென்றான். (௮)

அளிகுலாவியகாரோதியாகமவல்லியச்சொல்
தெளிவுறவுரைத்தலோடுஞ்செழுமறைச்செல்விசொல்வாள்
வளர்மதிச்சடையினானைமங்கலகுணங்களாலே
அளவிடற்கரியானென்றுமவனையேபகவானென்றும். (௯

சுருதியிற்புராணந்தன்னிற்சொற்பிரமாணங்காட்டிக்
கருதியுத்தரித்திடாமற்கற்பனைக்கதைசொல்வார்போல்
உரியநாமங்கள்கொண்டேயுவமையாற்பொருளைக்கூட்டி
விரகினுலுரைத்தாலத்தைமெய்யெனக்கொள்வாருண்டோ ()

 ஸ்ரீமத்வேதபரமார்த்தகாண்டம்.

ஸஹஸ்ரநாமங்கள்கொண்டேநிச்சயித்துரைக்குங்காலே
திகழ்வுறுஞ்சருவனென்றுஞ்சித்தசவயிரியென்றும்
பகவனென்றும்பேர்பெற்றார்பவுத்தனுமருகன்றானும்
அகிலமேலவனைநாமிங்கதிகனென்றெண்ணலாமோ. (௰௧)

நக்கனைப்பகவானென்றுநாட்டிநீகூட்டிவைத்த
தக்கவீச்சுரசிவாதிசகலசத்தங்களுக்கும்
முக்கியப்பொருளாந்தெய்வமுகுந்தனென்றுரைத்தேன்முன்னே
அக்கதையிங்குச்சொன்னாலவையுனோர்க்கபித்திராதே (௰௨)

நாரணமூர்த்திதானேநவையிலாக்குணங்களாலே
பூரணனென்பதற்குப்புராணமெய்ப்பொருள்களாலும்
ஆரணமொழிகளாலுமனைத்திதிகாசத்தாலும்
ஏரணிபிரமாணங்களிசைப்பெனென்றெடுத்துக்கொண்டாள்,

உத்தமவிருக்குவேதத்துபயவட்டகத்திரண்டாம்
அத்தியாயத்தில்வர்க்கமவையிருபத்துநாலில்
வைத்தகைத்திகிரிமாயன்மங்கலகுணங்கள்வான்மீன்
எத்தனையெனக்கண்டாலுமெண்ணரிதென்றுகூறும். (௰௪)

மருக்குலாங்குழலாய்மாயன்மங்கலகுணங்களெல்லாம்
பெருக்கமேழுனியின்மீதுபிறந்தவர்பிறப்போர்நிற்போர்
திருக்கிலாவுளத்தராகித்தேரினுமுடியாதென்ன
இருக்குவேதத்துவேறுமியைத்திடவிசைக்குமன்றே. (௰௫)

விண்டுவினுடைமையானவீரியகுணங்களெண்ணிக்
கண்டிடத்துணிதல்பாரிற்கழிதுகள்கணக்கிட்டேற்றிக்
கொண்டிடலொக்குமென்னக்குறித்தெசுவேதத்தாதி
பண்டைக்காண்டத்திரண்டாம்பருச்சத்திற்பகருமாதோ. ()

பாவமுஞ்சிறையுந்துன்பும்பசியுமில்லாதானென்றும்
கோவைமங்கலங்களானகுணமெலாமுடையனென்றும்
தாவுமிக்குணங்களெல்லாந்தற்சுபாவத்தனென்றும்
மேவுசாவித்தைதன்னில்விண்டுவைப்புகழுமன்றே. (௰௭)

இருமையேழுலகுபோற்றுமிராமச்சந்திரப்பிரானை
அரியுலாங்குழலாய்நாற்பத்தாறுகால்வேறுவேறு
மருவுமந்திரங்கடோறும்வகையுறப்பகருமென்று
பாவுசீர்யாச்சவர்க்கவபநிடம்பகருமன்றே. (௰௮)

கணிதமில்குணங்களெல்லாங்கண்ணனுக்குளதென்றெண்ணித்
துணிபவர்மூத்தவொன்றுஞ்சுபாலமோபநிடதஞ்சொல்லும்
மணியெனத்துலங்குமேனிமாயனைப்பகவானென்று
பணிதிகழ்கின்றகெற்போபநிடதமும்பகருமன்றோ. (௰௯)

அகிலெல்லாமணைந்தகொங்கையன்னமேயதனுக்கேற்க
மகரவாருதியினுள்ளமணலெல்லாமெண்ணினாலும்
திகழுநற்கமலநாபன்றிவ்வியகுணங்களெல்லாம்
தொகையிடற்கரியவென்றுசொல்லுமச்சியபுராணம். (௨௰)

விற்றொடுத்தொருவன்வானில்விட்டவெஞ்சரமவ்வானில்
சற்றிடமின்றியேகச்சத்தியற்றழியுமாபோல்
கற்றவர்தாமுமான்மங்கலகுணங்களைத்தம்புந்திக்
குற்றனபுகழ்வொன்னவுணர்த்திடும்விண்டுதன்மம். (௨௧)

செங்கண்மாயவனையுன்றன்றிருவவதாரத்தொன்றின்
மங்கலகுணங்களெல்லாமணல்பனித்திவலைவான்மீன்
இங்கிவையெண்ணினுமெண்ணமாட்டார்களெஞ்சில்
சங்கையற்றவரும்பன்றுடாங்கணக்கிடினுமென்ற (௨௨)

பையவாரணத்தான்வச்சாபசரணஞ்செய்துமீள
வையமேல்வந்துபாதம்வணங்கிவாழ்த்தியதோர்வாய்மை
செய்யபாகவதத்தென்னுந்தெசமகந்தத்திற்சீரார்
ஐயிரண்டேனநாலாமத்தியாயத்திலுண்டே. (௨௩)

சகலமங்கலங்களானசற்குணராசியாலே
அகணிதனுயிரினுமணிமையேமுதலெட்டான
தொகுமயிச்சொரியத்தானுஞ்சுத்தசாத்துவிதத்தானும்
பகவனுமுடிவிலானும்பாம்பணைப்பரமனென்ற. (௨௪)

சத்திரயாகஞ்செய்நாட்சரசோதிநதியின்றீரம்
நித்தராமுனிவரெல்லாநிருபணஞ்செய்ததன்மை
பத்ததாங்கந்தத்தேயெண்பத்துநாலாகிநின்ற
மெய்த்தசீரத்தியாயம்பிருகுவிஞ்ஞானத்துண்டே. (௨௫)

அன்னகந்தத்திலெண்பத்தைந்ததாமத்தியாயம்
தன்னிலச்சுருதிபோற்றத்தகைமத்தகீதையினின்மாலைப்
பன்னுநற்குணங்களாலேபரிமிதந்தானிலானாய்
மன்னுசீர்ப்பகவானேமாமுகில்வண்ணன்றானேயென்றும்.

பங்கயன்முதலினோரைப்பகுதிசம்பந்தராக்கி
அங்கெலாமுறைத்துபற்றற்றணிமைமேயமுதலாமட்ட
மங்கலைச்சூரிய கிவாழ்கின்றாய்வாழியென்றே
பொங்குநால்வேதந்தானேபுலப்படப்புகழ்ந்ததுண்டோ.()

மதுமலருந்தியானைமங்கலகுணங்கட்கெல்லாம்
பதியெனப்போற்றிவச்சாபகாணஞ்செய்தநாளில்
சதுமுகன்பகர்ந்தகன்மைத்தலத்தினிற்சாற்றுமன்றோ
பதுமமாம்புராணத்தைம்பத்தொன்றுமத்தியாயம் (௨௭)

திவ்வியகுணங்களாறிற்றிறத்தினைவிரித்துக்கூறின்
ஆவ்வகைக்குணத்தான்மிககாலச்சுதனவனேயன்றி
மெய்வழிப்பகவானென்பவேறினியில்லையென்று
செவ்விமேயார்புகழுநற்புதத்தினிபசங்கிதையுஞ்செப்பும். ௨௯

காண்டிலயிருமுடுந்நந்தமாமுனிவர்ஞானம்
நூ[illegible]லினை[illegible]புராணந்துருவருக்குபதேசித்தல்
காண்டுமிடத்துநிதிக்காசிபாதிதிக்கோதும்
பாண்டவர்காலதயானடஞ்சமவேதத்துள்ளும். (௩௰)

துரியமந்திரமாச்சொல்லுந்துவாதசாக்கரமதான
பிரமவித்தையினின்மேலோர்பேசிடும்பகவனுமம்
புருடவுத்தமனுமாமேலொதுவறவுடையானென்று
பரிவுறச்சகலமேலாகம்பாடமாய்ப்பகருமாதோ. (௩௧)

அந்தமின்ஞானஞ்சத்தியதிகயிச்சொரியம்வீரம்
முற்றியபலந்தேசெல்லாமுகுந்தனுக்கேயுண்டென்றும்
மந்திரசாத்திரத்தின்மாவிலக்குமியதான
தந்திரப்பகரணந்தான்றகவுறச்சாற்றுமன்றே. (௩௨)

சென்மமாரணங்களென்னுந்திக்குணமில்லாதானும்
நன்மையாங்குணமுள்ளானுநாரணனன்றேனேயென்றும்
தொன்மையாம்பிரமாண்டத்திற்சொல்லுமத்துலங்குமாலை
வசிகராமனாலுமங்கலகுணத்தானென்னும். (௩௩)

மிகநிம்பரமஞானவிருத்தர்களெனக்குமுன்னாள்
ஒக்கநற்குணங்களெல்லாமுடையவன்மாலேயென்றார்
அக்குணமுடையமாலிவ்வசோதைநந்தனனேயென்ற
தக்கவீடுமன்சொல்பாரதச்சபாபருவஞ்சாற்றும். (௩௪)

அனைத்துலகத்துளோருமநேகமாயிரகாலங்கள்
நினைததிருந்தெண்ணிலுநீள்கடற்றுயிலுமாயன்
கனைத்தமங்கலகுணங்கள்கணக்கிடமுடியாவென்றும்
பனைத்தடக்கொடியான்வேதபாரதத்துரைத்தான்மன்னே()

சதுமுகப்பிரானைப்போலத்தழைத்தவாணாளுங்கோடி
சதனமண்டலமூடாவுமாச்சரியமிலாநெஞ்சம்
சிதைவறப்படைத்தபோதுஞ்செஞ்சுடர்த்திகிரிமாலே
தலைவுறநிறைந்தவுன்றன்சகலமங்கலகுணத்தில். (௧௬)

பல்பதினாயிரத்தோர்பாகமாத்திரத்தைத்தானும்
சொல்பவருளரோவென்றேதுதித்தானுரைத்தமாற்றம்
வெல்பொருள்வராகத்தன்னில்விரவியவெழுபத்தைந்தாய்ச்
செல்வழியத்தியாயந்தெளிவுறச்செப்புமன்றே. (௧௭)

௮-வது-பகவற்சத்தார்த்தவிவரணபரிச்சேதம்.

புருடனென்கின்றபேரும்பொங்குசீர்ப்பகவானென்ன
மருவியேநின்றபேரும்வாசுதேவனதேயென்றும்
பரவுமப்பகவற்சத்தப்பதப்பொருள்ஞானஞ்சத்தி
விரவியபலமகீர்த்திவீரியமயிச்சொரியம். (௧)

சொன்னவிக்குணங்களெல்லாந்துளவமாறனதேயென்றும்
பன்னுமத்துளவமாலேபழிக்குணமிலாதானென்றும்
அன்னவனல்லாதாரையழைத்திடும்பகவனாமம்
பன்னுபசாரமென்றும்பராசரபுராணங்கூறும். (௨)

சுருதிகளின்னவாறுசொல்லியசொல்லினாலும்
மிருதிகளதனுக்கேற்பவிளம்பியவிபரத்தாலும்
கருதியபுராணமெல்லாங்கழறுகட்டுரையினாலும்
பெரிதிதிகாசத்தாலேபெறும்பிரமாணத்தாலும். (௩)

பகவற்சம்பந்தமென்றும்பரமபாகவதரென்றும்
இசைபற்றுபகவற்கீதையென்றும்பாகவதமென்றும்
தகவுற்றதிகிரிமாயன்சம்பிரதாயந்தன்னைப்
புகல்வுற்றுவழங்குகின்றபுவனதிட்டாந்தத்தாலும். (௪)

பகவனென்கின்றநாமம்பைந்துழாய்மாயனுக்கே
மிகுமசாதாரணப்பேர்மேருவில்லினைச்சொற்றாலும்
அகிலமேற்பரிதிசோமனகினியாதியாரைத் [ன்றாள்.
தொகைபெறச்சொன்னவாபோற் சொல்லிய தன்மைத்தெ

பரமார்த்தப்படலமுற்றும்-ஆக-திருவிருத்தம்-௨௱௫.

௨-வது-உபாசனாப்படலம்.

௧-வது-சிவவுபாசனைப்பரிச்சேதம்.

ஆரணவல்லியவ்வாறறையவாகமத்துமாறு
சீரணிபகவற்சதத்துஞ்செங்கண்மாலுமமைக்கில்
வாரணிபுலையாயந்தமாயவனிருக்கவாமத்
தோரணஞ்சனையேவேதமுவாசனைசொலுமோவென்றாள். (௧)

மற்றவாசகத்தைக்கேட்டமாமறைமயிலுஞ்சங்கை
உற்றவார்சடையிறைனையுவாசியமென்னவேதம்
சொற்றதுமுளதேயாகுற்றோன்றவுத்தரிதநபாயின்
வெற்றியுநனதேயந்தவிடையனேயானுமென்றாள். (௨)

ஆகமவல்லியச்சொற்கடகிழ்ந்தரனைத்தானே
ஓகைகூரியன்றாசமெல்ல மூவாசியமென்றதன்மை
நிருதிகளெல்லாமுநிகழ்த்துமெனக்கனையெல்லாம்
காளகண்டனைக்கவலமின்னோகைகூடனஞ்செய்தியாகில். (௩)

கல்வியுமனதேகேள்விகருத்துமனதேசொல்லும்
சொல்வனப்புனதேகூத்துணிவுமுன்றனதேபின்னை
வெல்வினையுனதேயுங்கள்விளம்பும்பரனேயென்றுப்
பல்விதபிரமாணத்தின்பயனெல்லாம்பகரலுற்றாள். (௪)

வேறு.

உன்னுசாகைகள்பலவினுமுபநிடங்களினும்
சொன்னதைசிவவுவாசியவத்துவைத்துணிவால்
இன்னதன்மையனென்றெடுத்தேயிசைவிக்கும்
தன்னைநேரிலாநாரணவுபநிடந்தன்னில். (௫)

ஓதுணர்ந்தபேர்புகழநுவாகமோரொன்றில்
ஆதியாமநுவாகத்திலன்பருக்கெல்லாம்
தீதின்முத்தியையளிப்பவனென்னவுஞ்செகத்துக்
கோதுகாரணனென்னவுமொருவனையுரைத்து. (௬)

ஆமவன்றனைப்பிரணவவாச்சியனென
மாமகேச்சுரனென்றுபேர்வெளிப்படவகுத்துத்
தாமமார்குழற்றறையலேயன்னவன்றனக்கே
தோமிலாவுவாசத்துவஞ்சொல்லுகையாலும். (௭)

மூன்றுரைத்தசொற்கேற்பமூன்றமநுவாகம்
தன்னிலந்தநீபாசியன்றன்சொருபத்தை
மன்னுகிட்டிணபிங்கலன்மாவிருபாக்கன்
என்னவிப்படிநிச்சயித்தியம்புகையாலும். (௮)

சடையுமாதியுங்கண்ணுதலுபாசியெனலால்
நடுவதாமநுவாகமோதியநாரணனை
நெறிநியாயத்தினலுபாசகனெனநிகழ்த்தி
அடைவிலப்பொருள்கொண்டிடம்வண்மைகையாலும் ()

தரூபவாசகனுனநாராயணன்றன்னை
மிருபாதத்துவமென்றிதில்விளம்பியதெல்லாம்
மங்கையானவம்மீசுரனயிக்பாவனையால்
அகல்விழிசசியேயத்தனையாகையினாலும். (௰)

அரியவீச்சுரனயிக்கபாவனையினலரியைப்
பரனெனுஞ்சொலும்பகர்ந்திடப்படல்கருமேபோலவன்
மருவுமந்திரவாதிபர்கருட்டபாவனையால [ணின
கருடனுவனுகாட்டலாமாகையினாலும். (௰௧)

அன்றியும்மவையறிந்திடுமுபநிடக்கருத்து
வென்றிமீச்சுரனுபாசனையாவரும்விருப்பத்
துன்றுசீர்ப்பாதத்துவந்துதிபரமதாய்ச்சொன்ன
தென்றுமோர்பொருளியம்புகைக்கிசைகையினாலும் ()

இன்னதன்மைகணிற்பநாரணனைமுன்னியம்பி
அன்னதற்குமேலம்புயங்கோசமாமிதயம்
வன்னிமத்திமத்திற்பரமாத்துமாவைகும்
என்னவிப்படித்தெளிவுறவிளம்புகையாலும் (௰௩)

அனையதாமிதயத்தைநாராயணன்றனதே
எனமொழிந்திடாதிருக்கினுநியாயத்தினியல்பால்
புனிதநாரணனிதயமென்றேபொருள்கொள்கை
இனிமையாயுசிதம்பெறவிசைகையினாலும். (௰௪)

பாண்டுமைந்தனைப்பார்த்தனைப்பார்த்துநாரணனுக்கு
நீண்டருணனன்னைத்திரமளித்தவனின்னைத
தூண்டுகின்றவென்னுடையவீச்சுவரபாவனையைக்
காண்டியென்றுதன்வாக்கினாற்கழறுகையாலும். (௰௫)

பாணிகர்த்தசொல்லாலுயர்நாரணனுபநிடம்
ஈனமற்றசங்கரனையேயுபாசியெனவும்
ஞானவச்சுதனுபாசகனென்னவுநாட்டித்
தானுரைத்ததுதானிம்மனிச்சயந்தானே. (௰௬)

சிந்தைகூருமவ்வுபநிடந்திங்கள்வேணியற்கே
முந்துயாசியதத்துவமொழிந்ததேயானால்
அந்தமேலவனேபிரமாவவனேசீர்
இந்திரன்றனையுஞ்சிவனென்னுமோவென்னில். (௰௭)

புவனம்யாவையும்படைத்தளித்தழிப்பதுபுணர்ப்பாம்
அவர்கண்மூவரிலொருவகைத்தொழிற்கதிகாரச்
சிவனெனும்பெயர்படைத்துயிரனைத்தையுஞ்செருக்கும்
அவனையேயந்தத்தோத்திரஞ்செய்ததந்தனையே (௰௮)

ஆனபோதுநாராயணன்றன்னையுமவனென்
றேநவின்றிடவேண்டியுமிருக்குமேயென்னில்
மேனிகழ்ந்துடனேபரமாக்கரவியன்சொல்
தானிருக்கையினாலதுநாரணன்றானே. (௰௯)

ஈதலாதுநாரணன்றனைவிச்சுவமென்றும்
தீதில்வெள்ளியென்றுஞ்சொன்னவேதங்கள்சிவனைக்
கோதில்வெள்ளியின்பதியென்றுங்கூறும்விச்சுவத்தின்
நாதனென்றுமங்கவனையேபரத்துவநாட்டும். (௨௰)

சீதரன்றனைத்திகழ்வயிட்டிணவதந்திரத்தில்
ஏதமாகியபகுதியென்றிருக்கையினாலே
இதுவேதங்கணியமித்தகாரணனென்றவொருவன்
மாதுபாகனேயென்பதுநிச்சயவழக்கே. (௨௧)

அச்சுதப்பெயரானையுஞ்சிறந்தவாரணங்கள்
விச்சுவப்பதியென்னவும்வெள்விகட்கெல்லாம்
நிச்சயித்திடுமதிபதியென்னவுநிகழ்த்தி
உச்சரித்தசொல்லோர்ந்திடும்பொழுதுபசாரம். (௨௨)

தகைமையாளுபர்சங்கரமூர்த்தியைத்தானும்
மகிமைவேதங்கள்விச்சுவமென்றிடும்வாய்மை
அகிலலோககாரணனவனாகையினாலே
புகலுகின்றதத்தனையிதுபுதுமையொன்றன்றே. (௨௩)

கன்னிபாகனதுபாசனைபகர்ந்தசாகைக்குப்
பன்னுநாரணோபநிடமென்றேபெயர்பலித்த
தென்னினாரணவிருடிமூன்கால்வகையாலந்தி
அன்னவன்றனைப்பரத்துவநாட்டியதன்றே. (௨௪)

திருந்தவஞ்செழுத்திருத்தலாற்சதவுருத்திரியம்
பொருந்துமேன்மையாலவிளங்கியதன்மையேபோல
பிருந்தைமானும்பஞ்சப்பிரமமும்பொருந்திடலால்
விரிந்தநாரணோபநிடதமும்விளங்கியதன்றே. (௨௫)

விரித்தவிந்தநாராயணோபநிடத்தில்வேதா
உருத்திரன்வயிற்பிறந்தமையோதுகையாலே
திருத்தமானவத்திகிரிசங்கந்தலைமச்செங்கை
தரித்தமாலிடைப்பிறந்தனனென்றிடத்தகாதே. (௨௬)

பெயர்ந்துபோயதோர்கற்பபேதந்தனிற்பிரமன்
புயங்கசாயிதேகத்திடைவாக்கினாற்புறத்து
மயங்கியேபுறப்படவழிகாண்கிலாமையினால்
வியந்துமான்மலர்நாபியாற்புறப்பட்டுவிட்டான். ௨௭

ஆதலாலயன்கமலசம்பவப்பெயர்க்கமைந்தான்
போதில்வாழ்பவனகத்தின்மாயனும்புகுந்து
வாதுவென்றதோர்பிலத்துவாரத்தில்வந்ததனால்
நீதிலாவதோக்கசனெனும்பெயரினிற்சிறந்தான். ௨௮

தகுதியாமவரிருவருஞ்சரீரங்கண்மாறிப்
புகுதியும்புறப்பாடுமேயலைதுபுணர்ப்பால்
திகழொருத்தருக்கொருத்தர்சென்மித்தவரல்லால்
பகருருத்திரனிடத்திருவோருமுற்பவித்தார். (௨௯)

ஈதலாஞ்சிவாகமத்தினின்விளம்பியதிவ்வா
றோதுசொற்கிசைந்திடவானுபயபூருவினும்
வேதனுந்திறல்விண்டுவும்பிறந்ததுவிரித்துப்
போதமேற்கொளவியம்பியதிலிங்கமாபுராணம். (௩௰)

நிறைந்தலோகமுநிற்பவுந்திரிவவுமெல்லாம்
இறந்தகாலமுமிறந்திடாவிந்துவேணியனைச்
சிறந்ததாமரைத்தவிசிடைத்திசைமுகனிடத்தில்
பிறந்ததாகவும்பிதற்றுவாரறிகிலாப்பேய்கள். (௩௧)

இருந்துநெஞ்சமுங்கண்டமும்பிரமரந்திரமும்
பொருந்துநாவுதன்புருவதன்னெறியுமெப்பொழுதும்
இருந்தயோகியர்க்கீறிலாவீச்சுரன்றோற்றந்
தருந்தியானமாத்தலமெனயோகநூல்சாற்றும். (௩௨)

ஆகையாலயன்புருடனென்னெறியிலவ்வமலன்
யோகசாத்திரமுறைமையாற்றோன்றியதுளதே
பாகுசேர்மொழியாய்பலசொல்லியும்பயனென்
னைகூரரிக்குமாபதியுபாசியனென்றான். (௯௩)

உ-வது-சிவவுபாசனைமறுப்புப்பரிச்சேதம்.

அங்கயற்கணுமையிலுரைத்தவம்மொழிலையக்
குங்குமத்தனவாரணைக்கொடிமணங்கொள்ளாக்
கங்கணங்கணெங்காலியிற்கலியின்கவினைக்கறங்கப்
பங்கயங்களைக்கொட்டிச்சிரித்திவையிவைபகர்வாள். (௧)

படைத்தகாளியாய்த்தலைமகளுமோர்பதியைக்
கடைத்தொழிற்சிலர்சுதந்தரஞ்சொலுங்கதையதுபோல்
அடுத்தமால்பரமாணாரணவுபநிடதமதைப்
பிடித்துநீயிங்ஙனென்பிணங்கினைச்சிவபிராந்தே. (௨)

தேன்றருங்குழற்சேயிழையேயிதுநிற்ப
என்றுகொண்டுநீயிந்துசேகரனுபாசனையை
ஆன்றசெஞ்சொனாராயணவுபநிடத்தாலே
தோன்றவுத்தரிக்கின்றனையென்றுமுன்சொல்லி. (௩)

உன்றனுத்திபின்கற்பிதமாய்ச்சிலவுரைத்தும்
என்றும்வேதவிருத்தமென்றிகழ்ந்தசொற்களிலே
பின்னையுஞ்சிலகூட்டியும்போறிவாளர்
அன்றிநின்றவராகிலுமறிப்பொன்பதற்காய். (௪)

இனையசொற்சிலசொல்லினையிங்கிதுநிற்பப்
அணிமலர்க்குழலாயுபநாரணோபநிடம்
புனிதநாரணனுபாசனைபுகன்றதெனபதற்கும்
அனகனுந்தந்நாரணன்றன்னையர்ச்சித்து. (௫)

முன்புசங்கரன்மகத்துவம்பெற்றுளமுறைக்கும்
அன்பருமயன்சிவன்முதலாயினோர்க்கெல்லாம்
துன்பமற்றமாலிடத்திலேதோற்றமோடொடுக்கம்
எனபதற்கியாணியம்புவல்கேன்பிரமாணம். (௬)

தலாயில்பாதொருசத்தமும்பொருள்கொளுமிடத்துப்
பெரிதுபக்கிரமோபசங்காரமப்பியாசம்
மருவபூருவம்பலம்புகழென்றறுவகையாய்
விரிதபாயநிச்சயத்தினுற்பொருள்கொளல்வேண்டும். (௭)

அடைவுசேரநுவாகங்களறுபத்துநான்கும்
உடையதானாராயணவுபநிடந்தன்னை
இடையின்மூன்றநுவாகமாத்திரமெடுத்திசைந்த
படிபொருட்கொளினுலகசம்மதமெனப்படுமோ. (௮)

உரைத்தநாரணவுபநிடத்துபக்கிரமத்தும்
நிரைத்தமுன்னநுவாகத்துநீள்கடற்றுயில்வும்
பெருத்தகாரணத்துவமுந்தனிற்பெரியோர்
ஒருத்தரின்மையும்படைத்தவனொருத்தனையுரைத்து. (௯)

வாய்த்தவாகமவல்லியேமற்றவன்றனையே
ஏதமுத்திமைத்தருபவனென்னவுமுரைத்துப்
பூதநாயிநாராயணன்றன்னையப்புருட
சூத்திரஞ்சொன்னவண்ணதிறற்சிலசொல்லி. (௰)

வைத்தவிம்முதலாமநுவாகத்தினுமேலே
இத்துடன்கலந்தோதுகவெனச்சொலியிருந்த
உத்தரத்துநாராயணவுபாநுவாகத்
தத்தினிற்றிசைமுகனுறையுகரமென்றதற்பின். (௰௧)

கோலமாமலராசனத்துறையிலக்குமியும்
சேலையாகவேழ்கடலையுமுடுத்தமேதினியும்
ஏலுமிங்கிவரிரவொடுபகலவணிரண்டு
பாலும்வாழ்ந்திடுபத்தினிமாரெனப்பகர்ந்து. (௰௨)

ஆரணத்திசைத்திவன்றனையயிர்த்திடாவண்ணம்
சாருமத்திமயாமநுவாகங்கடமிலே
நாரணப்பெயர்பதந்தொறும்பதந்தொறுநாட்டி
நேரிலாப்பரதத்துவமென்றுநிச்சயித்து. (௰௩)

அந்தமாமநுவாகமெய்வாய்மையினுலும்
முந்துநாரணன்றன்னையேசொலிமுடித்திடலால்
பந்திசேரளகப்பொனோநாரணனுபநிடம்
இந்துமோலியனுபாசனைசொல்லியதிலையே. (௰௪)

முழுச்சமத்தமையார்முதற்சாலுழாமுன்னம்
தழைத்தசெய்யின்முன்றுவியசாலுழுவார்போல்
இளைத்தவாதியுமந்தமுங்கிடக்கநீயிடையே
சுழித்தெடுத்தழுவனையநுவாகமுந்தொகையும். (௰௫)

உங்கள்சந்திரசேகரருபாசனையைத்
துங்கவாகமவல்லியேசொல்லியதில்லை
பொங்குமந்த்ரமூவகையதுவாகமெய்ப்பொருளைச்
சங்கைதீர்ந்திடவிளம்புவனியதனைக்கேள். (௰௬)

—•••●•••—

௫-வது- உபாசியனிருணயப்பரிச்சேதம்.

அந்தமூன்றினிலாதியதாமநுவாகத்
துந்துமந்தையாலுபாசியனென்னநீயுரைத்த
முந்துசீர்புனைமகேச்சுரனென்கின்றமூர்த்தி
இந்துசேகரனன்றமதெங்ஙனேயென்னில். (௧)

அவ்விடத்தினிற்பிரணவத்தாதியாயமர்ந்த
திவ்வியாக்கரமானதோரகாரவாச்சியனைக்
கவ்வைதீர்ந்திடமகேச்சுரனென்றகட்டுரையால்
மவ்வலோதியாயகாரவாச்சியன்றிருமாலே. (௨)

மற்றதெப்படியென்னின்வேதங்களுமகிமை
உற்றசாத்திரபுராணமுமிருதியுள்ளவையும்
பற்றிலாதநாராயணமூர்த்தியாம்பரனை
வெற்றிவேற்றுருபகாரவாச்சியனெனவிளம்பும். (௩)

சக்கரந்தவிர்ந்தக்கரந்தனுருவுகோறனைக்கொண்
டுக்கிரப்பரித்தேர்கடாவியமுகிலொருவன்
அக்கரங்களிலகாரநானென்றருச்சுனற்கு
மிக்குரைத்தனன்பாரதகீதையில்விளங்க. (௪)

திருத்தமாகியசங்கமுந்திகிரியுங்கரத்தில்
தரித்தமாயனையகாரவாச்சியனென்றதன்மை
வரைத்தடஞ்சிலையாற்புரமெரித்தவன்வாக்கால்
உரைத்தராமசகத்திரநாமத்துமுவந்தே. (௫)

அன்னதன்றியேபிரணவவாச்சியனுவான்
சொன்னவம்மகேச்சுரனெனத்துணிந்திடுமிடத்தும்
தன்னைநேரிலாப்பிரணவவாச்சியத்தாலும்
என்னையாருநாரணனிதற்கையமொன்றிலையே. (௬)

இங்கிதற்குரைத்திடும்பிரமாணங்களினிக்கேள்
செங்கயற்கணுமையினையதருவசிரத்தில்
பொங்குசீர்புனைபிரணவம்பூருவமாகத்
துங்கமானவட்டாக்கரத்தொகுதியுஞ்சொல்லி. (௭)

பேசுகின்றவப்பிரணவவாச்சியனை
தேசுகூருமந்நாரணன்றனையுபாசிப்பார்
ஆசிலாதவைகுந்தநாடடைகுவரொன்று
தூசுசேரிலடையாயடையாளமாய்ச்சொல்லும் (௮)

சனனமரணந்தவிர்த்திடுமிராமச்சந்திரனை
இனிமையாகியபிரணவவாச்சியனென்று
தனைநிகர்ப்பதொன்றின்றியதாரகப்பிரமோ
பநிடமோதியவாசகமூலமெலாம்பாடம். (௯)

விரிசபாலமாருபநிடத்தாலும்விண்டுவையே
பிரணவத்தினாற்சொலப்படும்பொருளெனப்பேசும்
இருமையானவிம்மறைகள்சொல்லியமொழிக்கிப்பால்
பரவுசொற்பலபுராணமும்பகர்த்திடும்படிகேள். (௰)

சீதரன்றனைப்பிரணவச்செழும்பொருளென்றும்
ஓதுமாத்துமமென்றுமவ்விரணியற்குதித்தோன்
மேதையானுரைத்ததுசொலும்விண்டுவின்புராணத்
தாதியஞ்சகத்தெண்ணிரண்டாயவத்தியாயம். (௰௧)

எஞ்சலின்றியவிப்புராணத்தினிலிரண்டாம்
அஞ்சகத்திருநாலதாமத்தியாயத்தில்
வஞ்சிசூரியமண்டலமத்திமத்துறைவான்
விஞ்சம்மன்மைநாராயணனென்பதுவிளம்பி. (௰௨)

அந்தநாரணன்பிரணவப்பொருளெனுமடைவும்
சிந்தையாவருந்தெளிவுறப்பிரமமாய்ச்செப்பும்
இந்தமட்டுமென்றிதற்குமேலானவஞ்சகத்தில்
வந்தமூன்றதாமத்தியாயத்துவாய்மையிலே. (௰௩)

மறைபிரித்தவாறெப்படியெனமயித்திரேயர்
அறிவுடைப்பராசரர்தமைக்கேட்பமற்றவரும்
முறைமுறைப்படிவியாதபட்டத்துமுன்னிருந்தோர்
எறிகடற்றலத்திருபதோடெண்மருண்டென்றும். (௰௪)

இவ்வியாதர்பின்வியாதபட்டந்தனக்கிருப்பார்
தவ்வலின்றிமேவச்சுவத்தாமனுமொன்றும்
அவ்வவ்வேதியர்துவாபராந்தந்தொறுமடைவே
இவ்வியப்புகழ்மறைத்துறைசெய்வர்களென்றும். (௰௫)

இருநிலத்தினின்மறையெலாமிறந்தகாலத்தில்
பிரணவத்துமட்டேநிலைபெற்றிடுமென்றும்
அருமையுற்றவப்பிரணவவக்கரந்தானே
பரவுமேலாகவுற்பத்தியதாம்பொருளென்றும். (௧௬)

இத்திறம்பெறும்பிரணவப்பொருளதாயிருப்பான்
நித்தனாகியநாரணனென்னநிச்சயித்துப்
புத்திபண்ணுதிநீயெனவிவையெலாம்புகன்றார்
சித்தமப்படியேமயித்திரேயருந்தெளிந்தார். (௧௭)

பன்னுபாரதகீதையிற்பிரணவப்பயனும்
என்னைநீநினையென்றுபார்த்தனுக்கரியிசைத்தான்
கன்னிபாகனும்பிரணவப்பொருள்கண்ணனென்று
சொன்னசொற்பிரமாண்டமாம்புராணமுஞ்சொல்லும்.௧௮

எட்டெழுத்திலொன்றாகியபிரணவவெழுத்தின்
திட்டமெய்ப்பொருளரியெனச்சுகமுனிதெளிந்து
பட்டபத்திரானும்பரிக்கித்துபூபதிக்குக்
கட்டுரைத்தமைவிளம்பிடுநீள்பாகவதம். (௧௯)

மாசிலாதசீர்ப்பிரணவமாதியாய்வைத்துப்
பேசிடுந்துவாதசாக்கரப்பிரமவித்தையினும்
தேசமேவினுசகலருந்தெளிந்திடச்செப்பும்
வீசுபாரதகதையுடன்விண்டுவின்புராணம். (௨௰)

கண்ணுதற்சிவன்முனிவர்க்குக்கண்ணனைக்காட்டி
எண்ணுசீர்ப்பிரணவப்பொருளாகியவிவனை
நண்ணிமுத்தியைச்சேருதிரென்றமைநாட்டும்
மண்ணின்மேனிகழ்பாரதார்த்தத்தரிவங்கிசம். (௨௧)

முந்துசீர்ப்பிரணவப்பொருளரியெனமொழிந்தான்
இந்திரப்பெயரவனைவெளிபெறவியம்பும்
அந்தமானவைம்பத்தொன்றுமத்தியாயத்துப்
புத்திகூரியோர்புகழ்ந்திடும்பதுமமாம்புராணம். (௨௨)

வண்டுழாயணியுஞ்சுடர்மவுலிமாதவனே
எண்டகும்பிரணவத்தினிற்பெறுபொருளென்று
புண்டரீகர்நாரதரிவர்புகன்றவாதரத்தில்
கண்டுகொள்ளுமாறுரைசெயும்பாரதகதை; (௨௩)

இராங்கலாபமாமயிலனுயிங்கிதற்கெல்லாம்
துளங்குசீர்புனைபுவனதிட்டாந்தமுந்தோன்ற
வளங்குலாவுநீடணிபரங்கத்துமாயனுக்கு
விளங்குகின்றதுபிரணவாகாரமாம்விமானம். (௨௪)

பிரணவப்பொருளரியெனும்பெருமைநீயறிய
ஒருதொடைப்படச்சிலபிரமாணநானுரைத்தேன்
கரிகருங்குழற்றோகையேவம்மகேச்சரனும்
தருணவெண்பிறைசூடியன்றச்சுதன்றனே. (௨௫)

அச்சுதப்பெயராலுயரற்புதன்றனையே
வைச்சசீர்புனைமகேச்சரனென்னுநாமத்தால்
உச்சரித்தெடுத்தோதிநீடிலகசம்மதமாய்
நிச்சயித்ததுகர்ப்பமாகியவுபநிடமே. (௨௬)

வாய்த்தசீர்ப்பதுமந்தனில்வாசுதேவனைமுன்
தோத்திரஞ்செயுஞ்சகத்திரப்பேர்த்தொகுதியினும்
கீர்த்திமைம்முகனிரணியகெர்ப்பசங்கிதையில்
ஏத்தியோதியவிராமநாமங்களாயிரத்தும். (௨௭)

தாமவேல்விறல்வீட்டுமர்பாரதந்தனிலே
சேமமாகவேயோதுநாமச்சகத்திரத்தும்
வாமமேகலைபல்குலாய்மகேச்சரனென்றும்
நாமதேயநாராயணன்றன்னதாய்நவிலும். (௨௮)

சுடர்குலாவுசீர்நேமிமாலேமகேச்சரனென்
றிடியுலாங்கொடியிந்திரன்றுதித்தவாறியம்பும்
படியுளோரெலாம்புகழ்ந்திடுபதுமமாபுராணத்
துடைவதானவைம்பத்தொன்றுமத்தியாயத்தில். (௨௯)

தருமகேச்சரநாமதேயத்தினைத்தானீ
டிலமீதறியார்களஞ்ஞானியரேனும்
திகிரிமாதவன்றனஞ்சயற்கோருபதேசம்
பகருநீடிதிகாசமாம்பாரதகீதை. (௩௰)

அலங்கலோதியாய்மற்றுமக்கீதையிலஞ்சாம்
புலன்குவிந்துளயோகநூல்புகன்றிடுமிடத்தில்
துலங்குசங்குசக்கரத்தையாயுதமகேச்சரனை
இலங்குறன்னறிவாற்றியானிக்கவென்றிருக்கும். (௩௧)

எற்றுவாகனன்வாணனுக்காகவந்தெதிர்ந்து
தோற்றநாண்முகுந்தனைமகேச்சுரனென்றுரைத்தது
மாற்றமைம்பதோடஞ்சதாய்வழங்குமத்தியாயத்
தாற்றமாய்ச்சொலும்பதுமதீர்த்தகாண்டம். (௬௨)

சொற்றமுக்கணன்பசுபதியாம்வாஞ்சுசர்பால்
பெற்றதன்மையையுரைத்திடும்பெருமறைக்கேற்ப
மற்றவன்றனக்குபர்மகேச்சுரனெனும்வரமும்
உற்றபட்டமுங்கட்டினரும்பரொன்பதனை. (௬௩)

சுருதிசிர்புனைபாரதகன்னபர்வத்தில்
திரிபுரப்பிரசங்கத்தில்வெளிபெறச்செகமேல்
உரைசெயாநின்றதாதலாலுயருமாபதிக்குச்
சரியிலாமகேச்சுரப்பெயர்வரபலந்தானே. (௬௪)

முன்னுசீர்மகேச்சுரச்சொற்குமுக்கியப்பொருளாய்
மன்னிநின்றவன்வனதுழாய்மாலைமாதவனே
அன்னதன்றிமுக்கண்ணனேயென்றறைந்தனையேல்
துன்னுமிவ்விடத்தினிலுரைத்துளமகேசுரனை. (௬௫)

உலககாரணனென்னவுமுத்தியையுதவும்
தலைவனென்னவுமுரைத்தலாலனையவாந்தன்மை
சுலபமாய்ப்பிறைசூடியவம்மகேச்சுரனுக்
கிலகுமாமறைபுகன்றிடாதினையதுமன்றி. (௬௬)

தங்குமுங்களதானவாகமத்திலேதானே
துங்கமாஞ்சதாசிவனிடத்தம்மகேச்சுரற்குப்
பொங்குந்தோற்றமுமொடுக்கமும்புகன்றிடுகையினால்
அங்கவன்றனக்குலககாரணத்துவமடாதே. (௬௭)

உலககாரணன்செங்கண்மாலேயெனுமுண்மை
பலபடச்சதுமறையினுண்மேற்பகர்கின்றேன்
புலமைகூரவிப்பொழுதுநற்புராணவாசகத்தால்
நிலைமையாகவேவிரித்துரைக்குவெனதுநீகேள். (௬௮)

கசேந்திரவுபாசனைப்பரிச்சேதம்.

தங்குபங்கயமலர்ந்ததோர்தண்புனற்றடத்தில்
பொங்குமும்மதக்கிம்புரிக்களிறொன்றுபுகுந்து
செங்கண்வெள்ளெயிற்றிடங்கர்வாய்ப்பட்டுளந்திகைத்துற்
றிங்கினிக்கரையேறுவதரிதெனவெண்ணி. (௧)

ஆதிகாரணனாகியவொருத்தனுக்கபயம்
சகலசீவதயாபரவத்துவுக்கபயம்
நிகரிலோகநியாமகநித்தனுக்கபயம்
பகரும்வேதபாராயணநாதனுக்கபயம். (௨)

ஆதியந்தமிலாதபரஞ்சுடர்க்கபயம்
கோதின்முத்தியைக்கொடுத்திடுந்தேவனுக்கபயம்
மூதுசத்துமசத்துமிலாமுதற்கபயம்
ஓதுபல்லுயிருக்குயிராமொளிக்கபயம். (௩)

சென்மநாமமுமுருவமுஞ்செறிகுணங்குற்றம்
கன்மமென்பதிலாதவொருத்தனுக்கபயம்
தன்மடஞ்செய்துபாவனலீலையாற்றன்னை
பன்மையாமுலகம்படைப்பான்றனக்கபயம். (௪)

புருடனென்றிடப்புலப்படுந்தேவனுக்கபயம்
அருவமாயுருவாயமர்வான்றனக்கபயம்
பரமவாத்துமனாய்ப்பரனாய்ப்பகவனாய்
விரிபரப்பிரமப்பெயர்விமலனுக்கபயம். (௫)

பெண்ணொடாணலியென்னவும்பிறிக்கரிதாகி
எண்ணரும்பகுதித்தொடரென்பதிலாதாய்
உண்ணிறைந்துபுறம்புநிறைந்துலகெல்லாம்
நண்ணுகின்றவியாபகனாம்பொருட்கபயம். (௬)

பிறப்பிறப்பிலியானபெருந்தலையாகிக்
குறிப்புறத்தனதிச்சையிலாகியகொள்கைத்
திறத்துவிக்கிரகங்கள்படைத்துமேதினிமேல்
அறத்தினைத்திரமாக்குமகண்டனுக்கபயம். (௭)

ஓதுகாரணமொன்றுந்தனக்கிலனாகி
மேதற்கொத்தவர்மிக்கவரின்றியேதானே
காதல்கூருலகுக்கொருகாரணனான
ஆதிமூலபராபரவத்துவுக்கபயம். (௮)

என்றுகொண்டுபொதுப்படவின்னனபடியே
நின்றுதன்றுதிக்கையினைவாறுறநீட்டி
மின்றிருந்தியமேகமுழங்குவபோல
மொன்றிமொன்றியினைத்துமுறைப்படுகோலே, (௯)

அனையமாகரிசொல்லியசொற்களனைத்தும்
வனசனைம்முகனுதியர்கேட்டுமதிப்பால்
இனையசொற்பொருளியாமலயாமலவென்று
வினவிவந்துபகாரம்விளைப்பதுவிட்டார். (௰)

ஈதுகாலையிலிலங்குநிறைந்தருளீசன்
வேதரூபவிகங்ககுலாதிபன்மேலே
ஆதரம்பெறவம்பரவீதியிற்றோன்றிச்
சோதியாழியிடங்கரறும்படிதொட்டு. (௰௧)

தந்திமுத்திபெறும்படிதண்ணளிசெய்தான்
அந்தவேலையினந்தரதுந்துமியார்ப்ப
வந்துநான்முகனைம்முகனென்முதல்வானோர்
சிந்தினார்மலர்மாமழைதோத்திரஞ்செய்தார். (௰௨)

இத்திறக்கதைபாகவதத்திருநாலாய்
வைத்தகந்தமிரண்டொடுநாலளவுஞ்சேர்
அத்தியாயமுரைத்திடுமெவ்வளவேயோ
உத்திகூர்பிரமாண்டமுமியாவையுமோதும். (௰௩)

பலவுபாசனைப்பரிச்சேதம்.

ஆதலாலுலகுக்கொருகாரணனாவான்
தாதுசேர்மலருந்தியில்வேதனைத்தந்த
தீதிலாநெடுமாயவனென்பதுதேனே
ஓதினேனதுமேலுமுணர்ந்திடுகென்றாள். (௧)

ஈதுநிற்பநாரணனைவேதங்களிச்சகத்துக்
காதிகாரணனென்னவுமுத்தியையளிக்கும்
நாதனென்னவும்பற்பலவிடத்தினுநாட்டி
நீதியாகவேநிச்சயித்துரைக்கையினாலும். (௨)

பெயர்த்துமிங்கிதிற்பேரடையாளமதாக
இயற்கையாகியவகாரவாச்சியனெனலாலும்
உயர்ச்சியாமகேச்சுரனையேயோதுமாதியிலே
இயக்கநீர்க்கடற்பள்ளிகொள்பவனெனலாலும். (௩)

கோதைபாகனுக்கெதிகடற்றுயில்வதுகூறு
தாதலாலுமிங்குரைத்திடுமேச்சுரனாவான்
சீதநாண்மலர்த்திருவளர்மார்பனென்பதற்குத்
தாதுசேர்குழற்றையலேசத்தியமிலையே. (௪)

கயலைநேர்விழிக்கன்னியேகருடவாகனனே
உயர்மகேச்சுரனென்பதிங்குள்ளவாறுரைத்தேன்
இயலுமந்தமூன்றுமாறுவாகத்தினிடத்தில்
பயிலுமவ்விருபாக்கனுமிலக்குமிபதியே. (௫)

பன்னுமற்றதெப்படியெனிலவ்விருபாக்கன்
என்னநின்றசொல்விவிதலோசனனையுமிதத்தால்
மன்னுகின்றபுள்வாகனன்றன்னையுமதிப்பால்
துன்னுருபமிந்திரியமில்லானையுஞ்சொல்லும். (௬)

ஆதலாலரியாயிரநயனனென்பதனை
ஓதுசீர்புனைபுருடசூக்தத்தினிலுரைக்கும்
கோதையேயிவன்பறவைவாகனனெனுங்கொள்கை
மேதினிக்குளியாவர்க்குநாம்பேசவேண்டாவே. (௭)

பந்தமாகியபகுதியாற்பற்றிலாப்பரமன்
இந்திரியங்களுறுப்புருவமுமிலாதவனென்றும்
கொந்துலாவுதாமோதிபாகமவிளங்கொடியே
சந்தமாகியவேதவேதாந்தமுச்சரிக்கும். (௮)

அன்றியேவிருபாக்கனென்கின்றவம்மொழியால்
இன்றுமுக்கணனென்னநீபொருள்கொளுமிடத்தில்
வென்றிநாரசிங்காதிவிக்கிரகங்கடமக்கும்
துன்றுமுக்கணுண்டெனப்பலபுராணமுஞ்சொல்லும்.

ஈதலாற்பிராமியபாராசரியமெய்ந்நிசக்கும்
நிதிலாப்பிரமாணமாஞ்சிற்பசாத்திரத்தின்
மூதுசீர்சயமுதனாத்தானமாமூர்த்தி
பேதகந்திறனானைமுக்கண்ணனெனப்பேசும். (௯)

மற்றிதன்றிபுள்வல்லிகேள்கீழ்நுவாகத்
துற்றநாரணையறனக்கடையாளமாயுரைக்கப்
பெற்றியம்பரப்பிரமசத்தமுமதன்பின்னுறப்
பற்றிநின்றதோர்புருடசத்தமுமிவ்வுபயமும். (௰௧)

துலங்குசீர்விருபாக்கனைச்சொல்லுகையாலே
அலங்கலோதியாயன்னவனாரணனேயாம்
இலங்கவின்னமுமொன்றுகேளிவ்விடத்தினிலே
பொலக்குழாய்புலப்படவுரைத்துவிபுருடனுக்கு ௰௨

ஓதுமித்தநீடுபநிடத்தாதியிற்கமல
மாதுபூமியுமருங்குறைபத்தினிமாரென்
றேதமற்றிடநிச்சயித்திருக்கையாலிவனைப்
புநிபூசியசிவனெனப்பொருள்கொளப்படாதே (௰௩)

கலைகளாற்செழுங்கவினுளமெய்யிலக்கணத்தால்
பொலங்கொள்கொம்பெனப்பொலிவுகூராகமப்பூவாய்
இலங்குகிட்டிணபிங்கலமென்கின்றவியல்பும்
நலங்கொள்பங்கயப்பாதநாராயணனிறமே. (௰௪)

அன்னதெவ்வகையென்னின்மத்திமவுருவாகம்
துன்னிவீடடைவுபாசனைக்குத்தலமாக
மன்னிநின்றசரீரபற்பத்தையும்வகுத்துப்
பன்னியங்கொருக்குக்குமாகாயமாம்பதத்தில். (௰௫)

உரப்புநீலமேகத்தினுள்ளேயிருந்தொளியைப்
பரப்புமின்னென்னநாரணனும்பரமான்மா
விருப்பமாகியவிக்கிரகத்துடன்விளங்கி
இருப்பனென்றெவர்க்கும்மூகபாடமாயிருக்கும். (௰௬)

நன்னுசீர்புனைநாரணன்றனக்குநாமாவாம்
வன்னமூன்றெனச்சுருதிகள்சகலமும்வகுக்கும்
என்னுபாரதகதையினும்பலபலவிடத்தும்
கன்னனுக்கநேகவிதவன்னஞ்சொலிகாட்டும் (௰௭)

அந்தநாரணன்மார்பினைச்சந்ததமகலா
திந்திரைப்பெருந்தேவிவீற்றிருக்கையினாலும்
விந்தையாதியாய்விளங்குவிக்கிரகநாரணற்குச்
சந்தமாம்பலபுராணமுஞ்சாற்றுதலாலும். (௰௮)

மொழியுமங்கவன்மூர்த்திமூவெட்டினிற்றியானம்
எழில்பெறும்படியுரைத்திடமிடங்களெங்கெங்கும்
பழுதிலாதநன்னிறத்தினைப்பலபலபடியாய்
வழுவிலாதநூல்சகலமும்வகுத்திடலாலும். (௰௯)

ஏதமற்றிடுகிட்டிணபிங்கலனாவான்
சீதரப்பெயர்மூர்த்தியேயங்குபாசியனும்
சாதனம்பரமாத்துமந்தானுநாரணனென்
றேதமற்றிடமுன்னமேநிச்சயித்திருக்கும். (௨௰)

௩-வது-வேதங்களிதரதேவதைகட்குபாசனையில்லையென்றபரிச்சேதம்.

நிச்சயித்ததிங்கெங்ஙனமெனவதுநிகழ்த்தில்
கச்சணிந்தபொற்கொங்கையாகமைக்கணங்குழையே
உச்சரித்துநீள்விரகிறையுத்தரித்திடநீ
வைச்சவற்றுவேரமறுவாகத்தினாலே. (க)

தூயதாம்பரஞ்சோதியென்றுந்துலங்கியவா
காயமென்றுங்களங்கமில்லாதசத்தென்றும்
மேயசம்புவென்றுஞ்சிவனென்றும்விஞ்சியசீர்
ஏய்பரப்பிரமம்பரமாத்துமாவென்றும். (உ)

வேதசாகைகளிப்படியிப்படிவெவ்வே
றேதமின்றிமேயியம்பியசொற்களினாலே
ஓதுபாசியவத்துவாமொருத்தனேயுலகோர்
ஆதரித்தறியும்படிக்காட்டுவதாக. (௩)

நம்புசீர்ப்பரமாத்துமாத்தானுநாரணனே
அம்பரப்பிரமப்பெயரானுநாரணனே
சம்புசத்தத்தினுட்பொருடானுநாரணனே
மொய்ம்புடைச்சிவமூர்த்தியுமந்தநாரணனே (௪)

தொக்கயோகியொண்பரஞ்சோதிநாரணனே
தக்கசீர்ப்பாதத்துவந்தானுநாரணனே
மிக்கசத்தொடுவிச்சுவந்தானுநாரணனே
முக்கணக்கிடுகாலமுமுற்றுநாரணனே. (௫)

இன்னவாறுபதந்தொறுநாரணனென்றெஞ்
ஞான்றியுன்னிமொழிந்ததற்குத்தரமாகக்
கன்னநேத்திரங்கேட்பனகாண்பனவிவற்றுள்
மன்னியுள்ளினும்புறம்பினும்வாழ்பவனென்றும். (௬)

புவனகாரணனும்பரிபூரணவானும்
தவறிலாதவனைத்தறிவுள்ளவன்றானும்
விவிதலோகம்வகுக்குமிடுக்குடையானும்
உவமையின்மையாமுத்தியுதந்தருள்வானும் (எ)

தனக்கொரீசனிலாமலிருப்பவன்றானும்
அனைத்துயிர்க்குமோரீச்சுரனாயமர்வானும்
மனத்தினுற்றுமுயற்சிவகுத்திடுவானும்
எனைத்துநாரணனென்றமுடிக்கையினாலும். (அ)

இப்பெருங்குறிசோறுவாகமதொன்றே
செப்புகின்றதுபோதும்பின்திருமாலின்
மெய்ப்பரத்துவத்துக்கெனவேதவியாதன்
ஒப்பிலாவொருசூத்திரமோதலையாலும். (௯)

மதிகுலாவியவாணுதலாகமமானே
அதிரும்வேதத்திலிப்படியோரடையாளம்
இதரம்தேவதைகட்கிலையாகையினாலும்
முதன்மையநாரணனேபரமாத்துமமூர்த்தி. (௰)

ஆகமங்கடெரித்துமிழற்றுமணங்கே
நாகமெல்லணையிற்றுயின்முகுந்தனையின்னணம்
ஓங்குகூர்பரமாத்துமனென்பதுரைப்பேன்
நீகுறிகொளவங்கதுநெஞ்சினில்வையாய். (௰௧)

பரவுசீர்புனையும்பிரபஞ்சசாரத்தில்
பிரணவத்தினுக்கிருடியுஞ்சந்தமும்பேசித்
திரயிருத்தவம்மந்திரத்துக்கதிதெய்வம்
தரையினிற்பரமாத்துமாவென்றுநிச்சயித்து. (௰௨)

உரைத்தவப்பரமாத்துமாவாகியவொருவன்
கரத்தினிற்கதைசக்கரம்வாள்வளைகமலம்
தரித்துமின்னிகர்பீதகவாடையுஞ்சாத்தி
இருக்குமங்கவனுமமும்விண்டுவென்றியம்பும். (௰௩)

அத்திறம்பரமாத்துமாவமலநாரணனென்
றுத்தரித்துவந்தனமதற்குத்தரமாகச்
சித்திரத்திலாட்பிரமனுஞ்சிவனுமிந்திரனும்
நித்தசூரியர்களுமெனவுரைத்ததுநினைத்து. (௰௪)

அனையதேவரொலாமவனேயென்றவடிபோல்
இனையநாரணனும்மவனேயென்றதிலையால்
தனையுருத்துறைப்பரமாத்துமந்தன்னைப்
பனிமதிச்சடிலச்சிவனென்றிடப்படாதே. (௰௫)

நீண்டவேல்விழியாயிதுதிற்பநின்னினைவால்
பூண்டசிற்பரமாத்துமாவென்னுமப்பொருளைத்
தாண்டவம்புரியுஞ்சிவனென்றுநிச்சயித்தால்
மீண்டுமங்கவனைச்சிவனென்னவேண்டாவே. (௰௬)

அங்கயற்கணாட்சிவனயன்படைத்தளித்தழிப்போர்
தங்களுக்குள்ளொருவனுமென்றுரைத்தனையேல்
உங்கள்சைவசித்தாந்தநூலவழிக்குமவ்வொருவன்
றங்குருத்திரனவனையச்சிவனெனாததகாதே. (௰௭)

அந்தநீர்பரமாக்கரமானசத்தத்தால்
பைந்துழாய்முடிமாலையும்பகர்ந்ததென்றனையேல்
முந்துநீர்பிரமன்சிவனிவருடன்மொழியா
திந்திரன்றனைக்கும்பிறகப்பகர்ந்திடுமோ. (௰௮)

அனையவக்கரசத்தமச்சுதனையோதாதோ
எனிலவன்றனைச்சகலசத்தமுஞ்சொலுமியல்பால்
தனிபெறப்பிரமன்சிவனிந்திரன்றானென்
றினிமையாய்ச்சொலுஞ்சொல்லுமாலைப்பகர்ந்திடுமே

இந்துநேர்நுதல்வஞ்சியிவ்விடத்திலக்கரச்சொல்
லைந்துழாயமுடிமாயனைப்பகர்ந்ததேயில்லை
முந்தியோதியதோர்பரமாத்துமமூர்த்தி
அந்தநாரணனென்பதற்கிலலையவ்வறையம். (௨௰)

நிருபவாகமவல்லியேயிவையெலாநிற்ப
அரியபாரதகீதையிலருச்சுனன்றனக்குக்
கரியமாமுகில்வண்ணராங்கண்ணனெந்நடமீச்
சுரியபாவனையானெனச்சொன்னவாசகத்தை. (௨௧)

இரவிதான்றியானித்துமின்மினிப்புழுவிடத்தில்
பெரியதேசினைப்பெற்றனனென்றபெற்றியைப்போல்
கரியமாமுகில்வண்ணனார்கண்ணனுஞ்சிவனை
உரியபாவனைசெய்தனனென்னவுமுரைத்தாய். (௨௨)

ஆகமப்பெண்ணேயருச்சுனற்கச்சுதன்றானும்
யோகசத்தியைக்காட்டினனென்றதுண்டாயின்
நீகுறித்திடுமத்தியாயப்பெயர்நிச்சந்
தேகவிச்சுவருபவத்தியாயமாய்ச்சொலுமே. (௨௩)

தருமனுக்கிளையாற்கிளையானொருதாளால்
இருநிலத்தையடக்கியவச்சுதனையுஞ்
கருதுவிச்சுவருபவிக்கிரகந்தான்காணப்
பெரிதுவாஞ்சையுற்றேனென்றபெற்றியினாலும். (௨௪)

வீரவிற்கையருச்சனன்மேலருண்மேவா
வாரிதித்துயின்மாயனுமென்வடிவத்துள்
ஓரிடத்திலுனைத்துலகங்களுமுளவாய்ப்
பாரெனத்திவ்வியஞானக்கண்ணளித்தபண்பாலும். உரு

மண்டுபார்த்தனுநின்றிருமேனியின்மாலே
அண்டகோடிகளைம்முகனான்முகனாதி
எண்டகுஞ்சுரர்நாகரியக்கரையெல்லாம்
கண்டுகொண்டனனென்றதோர்கட்டுரையாலும். உ௬

அவ்வுரைக்குயர்மாலுமருச்சுனனேநீ
பெய்வ்விழிக்கொண்டுகண்டவென்விச்சுவரூபம்
துவ்வலற்றதவஞ்சவனம்பலதானம்
எவ்வெவற்றினுங்காண்பரிதென்னையினாலும். (உ௭)

திகழுஞானவிலோசனஞ்செங்கண்மாலருளால்
தகையபுக்கணன்முன்புபெற்றந்தமாதவனார்
மகிமைவிச்சுவரூபத்தினைவளங்கண்டவாய்மை
புகலுகின்றதோர்வராகமாபுராணமேபோல. (உ௮)

இளைத்தநுண்ணிடைவஞ்சியேமற்றநும்பிறைவன்
திளைத்தவெஞ்சிலைவீரனுமிராமசந்திரனார்
விளைத்தவிச்சுவரூபமுன்னாட்கண்டமேன்மை
கிளர்தியோதியவிரணியகர்ப்பசங்கிதைபோல். (உ௯)

பகவனோதியகீதையும்பார்த்தனிப்பரமன்
திகழில்விச்சுவவுருவினைக்கண்டதேநிகழ்த்தும்
தொகவதற்குளேயோகமென்றோதியசொல்லால்
தகைமையுத்தியோகத்தையேசொன்னதத்தனையே. ()

மந்திரத்திறம்வல்லவர்கருடபாவனையால்
வெந்திறற்பெருங்கருடனாய்விளங்குமவ்விதம்போல்
அந்தமுக்கணனையிக்கபாவனையினாலரிதான்
உந்துதற்பாரனாயினனென்றுமொன்றுரைத்தாய் (௩௧)

வெய்யெழுங்கடல்விடத்தினைவிழுங்கியமேனான்
மைதிகழ்ந்தகண்டத்தினன்கருடபாவனையைச்
செப்புதன்மையைக்காருடகவசமந்திரத்தும்
மொய்க்கரும்பதுமத்துநான்முன்னமேமொழிந்தேன்

பாலலோசனன்பாத்துவமாயினுமன்றே
நீலமேனிமாலெனுஞ்சகத்திடைதியானிப்பான்
நாலுவேலைகள்பாற்கடலானபோதன்றே
கோலவாரமுதாதியாம்பொருளெலாங்கொடுக்கும். (௯௩)

இந்துசேகரற்கந்தரியாமிமாலென்று
முந்துசொற்குநீமொழிந்தவம்முககணமூர்த்தி
அந்தவந்தரியாமிபாவனைசெய்தவதற்கும்
சிந்தைகொண்டுகேளுபர்பிரமாணநான்செப்ப. (௯௪)

௭-வது-கிருத்திவாசனுபாசகனென்றபரிச்சேதம்.

மருத்துவன்முதற்சுரரெலாம்வானுலகிற்போய்
ஒருத்தனாகியேயோகமுற்றவ்விடத்துறைந்து
கிருத்திவாசனைக்கண்டுநீயாரென்றுகேட்ப
அருத்திகூர்ந்தவனந்தரியாமிபாவனையால். (௧)

முதுபரத்துவமுகுந்தனுன்முளரியாசனனுன்
கதிர்கண்மூன்றுநான்குபாத்தோடுசங்கமுநான்
உதவுமைம்பெரும்பூதநானெனவுமுரைத்து
மதருவச்சிரத்தாதிகண்டத்தினிலறையும். (௨)

அங்கயற்கணுமைமணையகிலகாரணனும்
செங்கண்மாலினையயிக்கியபாவனைசெய்தே
தங்குமேன்மையாற்சகலமுந்தாமெனமொழிந்தார்
உங்கள்சந்திரசேகரனொருவன்மாத்திரமோ. (௩)

இதயசுத்தியிலும்பிரதத்தனனென்பான்
அதிர்குரற்கிரிநேரயிராவதத்தானைப்
பதயுகந்தனில்வணங்கிநீயெனக்கொருபண்பால்
உதவுமுத்தியுபாயமுரைத்தருளென்ன (௪)

மற்றதற்கெதிருத்தரம்வானவர்கோவும்
நற்றுயிச்சகநல்கியகாரணஞ்சாற்றி
உற்றெனைச்செயுபாசனையன்றமையோதும்
பற்றுசொற்கவுஷீக்கியமந்திரபாடம். (௫)

சேமமாம்பிரமத்தினையிக்கத்தைச்செய்தே
நாமவாதபனுன்மனுநானெனநாட்டி
வாமதேவமகாமுனியோதியவாய்மை
தாமவார்குழன்மானனேயாய்மறைசொல்லும். (௬)

ஒல்லைபேவருந்தோற்றமுமொடுக்கமுமுடையார்
தொல்லுலமேற்றங்களும்பரனெனச்சொல்ல
வல்லகென்னெனிற்சாத்திரத்தினில்வழக்காகச்
சொல்லுமென்பதுபகர்ந்திடும்வியாதசூத்திரமும் (௭)

உரைத்தவிம்மறைப்பொருளுடனொருவழக்காக
வரைத்தடம்புயத்திரணியன்மதலையென்வயினை
பெருத்தலோகமங்கதனுளேயானென்றபேச்சு
நிரைத்தநாரசிங்காரியாம்புராணங்கணிகழ்த்தும். (௮)

நெய்புலாவுவேல்விழிபிறையிவையெலாநிற்கப்
பைப்பராவணைப்பரமனைப்பரனெனும்படிக்கும்
கையல்பங்கனுபாசகனென்பதனக்கும்
துய்யநூலினிற்பலப்பிரமாணமுஞ்சொலக்கேள். (௯)

பனிபிளம்பிறைவேணியான்றன்னைப்பரத்தோர்
அனகனாகியநாரணன்றிருவருட்கமைந்தாய்
மனதிலங்கவன்மந்திரஜபம்வைத்தாய்
புனிதமாயவன்பாததீர்த்தத்தையும்பொறுத்தாய். (௰)

மகிமைதங்குமவ்வாமனன்வளர்த்திமந்நாள்
சகலமங்கலகங்கையாற்பங்கயாசனத்தான்
திகழுமன்புடன்றிருவடிவிளக்கியசெய்கை
அகிலமேலுனைப்பவித்திரமாக்குகைக்கன்றோ. (௰௧)

விஞ்சுபுன்னணிபசன்மநீமேவிணையேயென்
றஞ்சறப்புகழ்ந்துஞ்சொலுமிருக்கின்மூன்றுஞ்சீர்ச்
செஞ்சொலட்டகத்தமோடொன்றனவத்தியாயத்
தஞ்சமைஞ்சுமோராறுமாயமைத்திடும்வருக்கம் (௰௨)

யாச்சவற்கியோபநிடதமுமிந்துசேகரற்கு
வாய்ச்சநாரணனுபாசியனென்றசொல்வழங்கும்
சாச்சுதம்பெறுமதருவசிரத்துமேதிலரூர்
தீச்சமுக்கணனைத்தியாதாவெனச்செப்பும். (௰௩)

எக்கணக்குளசிவகோடிகளிடத்தினிலும்
புக்குறைந்திடுமுயர்பரமாத்துமாப்பொருளாய்த்
தொக்கசீர்புனையும்பரஞ்சோதிதானென்று
தக்கபேர்புனைவிண்டுவாகியதருத்தனக்கு. (௰௪)

மிரவுசாகையின் றனமா மூருத்திரன்வேள்வி
யெரிதுசெய்தபின்மகத்துவம்பெற்றமையேசும்
அரியதாமிருக்கஞ்சதாமட்டகத்தஞ்சாய்
நவுசீர்ப்பருச்சத்திலாறுமறுவாகம். (௰௫)

வாரணித்தபொற்கொங்கைபாய்மற்றிதற்கொப்பக்
காமெனத்திகழ்மேமனியங்கருடவாகனனுக
கோமொழுதலையுமூருத்திரனுபாசகமெலாம்று
பாரதத்தினிற்பலவிடத்திலுஞ்சொலும்படிகேள் (௰௬)

தாதுசேர்மலர்ச்செஞ்சடைச்சங்கரன்சருவ
மேதவேள்வியிற்சகலபூதாதிலையவெட்டுத்
திதிலந்தரியாமிநாராயணனைதிருவா
ராதனைப்படியவையெலாஞ்சமர்ப்பணமாக்கி. (௰௭)

பெற்றவன்றிருவருளினான்மகத்துவமெல்லாம்
பெற்றுநானசகப்பிரபுவமேனவெனன்றம்பச்சா
வெற்றிமேவலெனத்தோற்றமாகிடவிழியனெங்கே
கொற்றநீதிம்சரிராசதனைமத்தும்லகூறும. (௰௮)

சிவனைவானவர்சேவைபன்னுவர்சிவன்கமலத்
தவனைநீபாசனைசெயுமந்தநாண்மூகத்துத
தவனுகந்தனைவழிபடுமிடான்றொழத்தக்கோன்
எவனுமில்லெனககண்ணனூர்தாமியம்பியதும். (௰௯)

மூக்கனூனைநீண்முளரிநான்முகன்முகநோக்கித்
தக்கசிடபூனைநாரனைனைக்குமூன்றனக்கும்
மிககவந்தரியாமியென்றுரைத்ததுய்விளம்பும்
செககராம்பல்வாயன்னமேமயசுவமேதகத்தில். (௨௰)

அ-வது-கிரிமடந்தையுபாசனைப்பரிச்சேதம்.

அரவணிந்திமமலரோபகிலநாயகரே
இரவுடன்பகல்யாதுதான்றியானமாயிருப்பீர்
உரைசெயும்பொழுதும்மிலும்பெரியர்யாரென்று
கிரிமடந்தையக்கிருத்திவாசன்றனைக்கேட்ப. (௧)

பாதிமேனிசெம்பவளமேநிகர்திகம்பரனும்
சீதவாணிமகருலகிலஞ்ஞானமாகின்ற
ஓதமாகடற்கோடதாரணனைனவுரைத்த
ஆதியத்தியாயஞ்சொலுங்கருமகாண்டத்தில். (௨)

ஏதமற்றவிளாவிரதப்பெயர்மேவும்
மாதலத்திமவானருள்வாணுதலுடனே
ஆதரத்திற்றொடமர்ந்தருளுஞ்சிவனன்பால்
ம்மதைமிகுளயோகசமாதியைமேவி.

புனைந்தசீர்மகாபுருடமந்திரஞ்செபித்திதயம்
கனிந்துநீசங்கருடனைதியானமுஞ்செய்து
முனைந்துதன்பிதாவானநான்முகனையுந்தந்த
அனந்தனேயரியேயெனப்புகழ்ந்துவாழ்ந்தனனே. (௪)

நன்க மாமலராதினுளகவினெல்லாங்கவர்ந்த
டச்சிகர் மலலடிப்பாவையேயபரமபாகவதி
தன் சனாகக்ஷேத்திரத்தினிலமர்பதினேழாம்
செருபிராசத்தியாயத்தினிற்றெளிவுறச்செப்பும். (௫)

மங்கலம் னையுந்துளவத்திருமாலைப்
பங்கயன்சிவனாதியார்ச்சனைபண்ணித்
துங்கமதங்கள்பதங்கள்படைத்தமைசாற்றும்
பொங்குபார்மிசைமாநரசிங்கபுராணம். (௬)

தூயாரவலைகடலிற்றுயில்வானை
வருலமலரோனரனிந்திரரெல்லாம்
சிரீதரகவுபாசனைசெய்தனரென்றே
நாரதீயநவின்றுதிரம்பெறநாட்டும். (௭)

வெற்றிமாலையுபாசனைசெய்தவியப்பால்
நெற்றிலோசனனான்முகனிந்திரனென்றோர்
உற்றதங்கள்பதங்களையொன்றொழியாதே
பெற்றதன்மைகள்பேசுமிலிங்கபுராணம். (௮)

பங்கில்வாழுயிராணியைச்சங்கரன்பார்த்துப்
பொங்குமாதவஞ்செய்துளபுண்ணியர்க்கல்லால்
செங்கண்மால்சரணம்புயமேன்மனஞ்செல்லா
திங்குணக்கதுவாய்த்ததேயென்றுகொண்டாடு (௯)

ஏமமாதிருநாமமோராயிருநூறும்
சேமமாமுபதேசமகிழ்ந்தருள்செய்து
நாமநூறுடனொலோதாலுநவின்றே
நாமிராமவுபாசனைசெய்தனுஞ்சாற்றி (௰)

நீயுமித்தவுபாசனையின்வழிநிற்றி
செயிழாவெனமுன்புரைசெய்தமையெல்லாம்
வேலைவென்றிடுதோளிணையாகமமின்னே
யபகூறுமதாமபுராணமிசைக்கும். (௰௧)

௯-வது-மார்க்கண்டனுபாசனைப்பரிச்சேதம்.

வண்டுபாடுமகிழ்த்தசடைப்பரமனைமாற்
கண்டமாமுனிகாலனைச்சிரம்புவிபற்றத்
தண்டனுகவிழ்ந்துசதாசிவனைநின்
றொண்டன்முத்திபெறும்படிசொல்லுதியென்ன (௧)

மாதுபங்கனுமவ்விடைவரவரமுனியே
சீதரன்றனையன்புடனேயுயர்திருவா
ராதனைப்பரிசின்றனைநறுமலர்க்கடிகைப
போதிருந்தவனைப்பரவாவிதுபுகல. (௨)

முந்துபூசராடத்தியிருந்துழிமுனியும்
நந்திவாசனைநீயுலகப்பதிமுனின்
வந்தனுருகவென்னுமதற்கதிநவின்றோம்
இந்தவாசகமென்னுரைசெய்தருளென்ன. (௩)

மோனமாதவபுங்கவமூவுலகத்தும்
தானமாகியதாபரசங்கமமெல்லாம்
தேனுலாமலரால்ருச்சனையெனச்செய்யும்
நானுபாசனைசெய்வதுநாரணன்றன்னை. (௪)

இக்கருத்திரகசியமின்றுரைசெய்தோம்
இக்கணக்கொணுகங்கிதுவேயுபம்தகம்
தக்கமுத்தியினிப்பெறுவாயென்றதன்மை
மிகக்கூறுமம்வேதம்விரித்துவிளம்பும். (௫)

சோதிபெற்றமயிற்பரியேறுசுவாமிக்
காதரத்தொடுமுக்கணன்மாலையருச்சித்
தேதமற்றனனென்றுரைசெய்ததியம்பும்
பூதலத்துவளப்புனைகந்தபுராணம். (௬)

சவிலமாமதிசெஞ்சடைமீதுதரித்தோன்
இலகுமாலையுபாசனைசெய்தனனென்றே
மலைமடந்தைதனக்குரைசெய்துளவாய்மை
நிலைபெறப்பதுமம்புவிமீதுநிகழ்த்தும் (௭)

ஏயமேன்மையிராமனைமுக்கணனிரோடு
ஆயிரந்திகழ்கற்பமருச்சனைசெய்தே
நேயமானமகத்துவமெய்தியசெய்கை
தூயநீதியகத்தியசங்கிதைசொல்லும் (௮)

ஆகையாலரியேபரனென்பதுமழகார்
தோகைபாகனுபாசகனென்பதுஞ்சொன்னேன்
பாகருந்திவளர்ந்தபசுங்கிளிபோல
ஆகமங்கடெரிந்துமிழற்றுமணங்கே. (௯)

உபாசனைப்படலம்-முற்றும்.—ஆக திருவிருத்தம்-௱௯௪.

அரிதாசர்திருவடிகளேசரணம்.

௫-வது-சர்வசிருட்டிவத்துநிருணயப்படலம்.

௧-வது-பெரியபிராட்டிபிரமருத்திராதிகளைச்சிருஷ்டித்தபரிச்சேதம்.

உத்தமத்திருமாலினுபாசனைநிற்க
வைத்தவிப்புவனத்தினின்மற்றவன்மார்பில்
பத்தினித்திருவின்னருண்மேன்மைபடைத்தே
வித்தகப்பிரமன்சிவனேமுதன்மேலோர். (௧)

ஆடசீர்புனையம்புவனத்திலனைத்தாய்
வயதங்கள்பதங்கள்படைத்தமையெல்லாம்
மேயவேதம்விதித்துரைசெய்தவிதத்தால்
தூயநீமதிதேறிடமாறுசொலக்கேள். (௨)

இட்டமானவிருக்கினிலெட்டெனவோதும்
அட்டகந்தனின்மேலெழுமத்தியாயத்தில்
திட்டமார்ந்தசமப்பெயர்சேர்வருக்கத்தின்
மட்டுலாமலர்மாதரியின்மனையாளை. (௩)

நிகரில்காரணியென்னவுநியாமகையெனவும்
தகையதன்மனமுகந்தவரெவரவர்தமையே
மகிமைதான்முகன்சங்கரன்வாசவன்வசுக்கள்
நிகழருக்காய்ச்செய்பவளென்னவுஞ்செப்பும். (௪)

ஏயவித்தவிருக்கினிவித்தவட்டகத்தில்
தூயவித்தவத்தியாயத்திற்சொல்லியவருக்கம்
பேயபின்வரும்புனிதமாகியவருக்கத்தில்
ஆயுசீரிலக்குமியரிமார்பினிலமர்வாள். (௫)

சர்வசிருட்டிவத்துநிருணயப் உாயங்

படலம்.

23312

முப்புரங்களெரித்திடமுக்கணனுக்குத்
தப்பிலாதபிஞகமளித்தருள்சார்ந்தான்
இப்பெரும்புவனங்களெரிக்கவுநிற்கும்
அப்புராரிபிறப்புமனுக்கிரகித்தான். (௬)

நந்துலோகசிருட்டிநடத்துதன்முன்னே
முந்துசீர்புனையுந்திறன்முக்கணனுக்குத்
தந்தையாகியநான்முகன்றன்னையுந்தந்தான்
எந்தநாளுமவட்கிடம்பாற்கடலென்னும். (௭)

பாலலென்றசெழுஞ்சொலினுகமப்பாவாய்
மாலின்மார்பகமாளிகையாயிடைவைகும்
ஏலவார்குழலிலக்குமிமகிமையையெலாம்
மேலுநானுனக்கேற்பவிளம்புகின்றேனல். (௮)

௨-வது-வேள்விவிச்சுவநாயகப்பரிச்சேதம்.

வேள்விவிச்சுவமென்றரியைச்சொலிவேதம்
தாழ்விலாதுயர்விச்சுவம்வேள்விதமக்கும்
வாழ்வுகூர்சிவனாயகனென்றவழக்கின்
சூழ்வினாலவனேபரனென்றுறுதித்தும். (௧)

விச்சுவம்மெனநக்கனரோதும்விதந்தான்
இச்சகத்தனிநாயகனையியென்றும்
அச்சுதன்றனைவிச்சுவநாயகனென்ன
உச்சரித்ததுநீம்பசாரமதென்றும் (௨)

தகைமைசேர்பஞ்சராத்திரமாயவன்றன்னைப்
பகுதியென்கையினான்மறைநின்றுபகர்ந்த
மிகுதியித்தமதாகியகாரணன்வேள்வித்
துகள்படித்தவனெனவுஞ்சிலசொன்னுர். (௩)

மின்னுமாழிமுகுந்தனைவேள்வியினலே
கன்னியாகனுபாசனைசெய்துகளித்தான்
னன்னநீடியிருக்கிவிளம்புகையாலே.
அன்னசங்கரன்வேள்வியினாயகனுகான். (௪)

மங்கலாகமவல்லிபெறுந்திறன்மானே
அங்கைமான்மழுவாளனைநீடபிசாரம்
தங்குவேள்விதனக்கிறையாவதுகொண்டே
பொங்கும்வேள்வியினதிபதியென்றனையோலாம். (௫)

மட்டிலாமலர்நான்முகனீந்தவரத்தால்
அட்டமூர்த்தியுமாயதிலாதியனாகப்
பட்டமெய்தியபாலவிலோசனனைத்தான்
திட்டம்விச்சுவநாயகனென்பதுசெப்பும். (௬)

இந்தவாறுபதங்களிரந்தவருக்கே
அந்தநீடியசாரமடுத்திடுமல்லால்
பந்திசேர்குழலாயரிதானபதந்தான்
தந்தபேணையுமாப்பதுவேவுபசாரம். (எ)

மன்னுமாகியபஞ்சவிராத்திரமாலைப்
பகுதியென்றுவிளம்பியிடும்பரமார்த்தத்
தகுதியின்னதெனத்தெளியாதுரைதந்து
மிகவுநின்றியாமலையேவெளியிட்டாய். (அ)

வீசுபஞ்சவிராத்திரநூலினிற்பின்னை
ஆசிலாதசகற்பரிபூரணனாகிப்
பேசுமாதியுயர்க்குழுமிலைலம்தார்பெம்மான்
வாசுதேவனெனும்பெயராலுயர்மாயன். (கூ)

பாவுமிச்சையினால்வெகுவாகியபகுதி
புருடகாலவியத்தமெனும்பொருளெல்லாம்
திரமதாம்படிசிட்டிசெய்தங்கவைதம்
மருவுதேகமதாகமகிழ்ந்திடுமென்றும். (௰)

இனையதாகியசிட்டியியற்றியபின்னை
அனையனாகியவாரணகாரணனாவான்
தனதுலீலையினமற்றுளதத்துவமெல்லாம்
மனமுகந்துசிருட்டிவகுத்தனனென்றும். (௰க)

அறிவினால்மிகுமங்கவன்சங்கருடணனேர்
பெறுபிரத்தியமன்னனிருத்தனும்பெயராய்
மறுவிலாதவன்மனமகங்காரமாம்வகையில்
செறிவுகூரதிதேவதையாயினனென்றும். (௰உ)

இனையவாஞ்சகந்தோன்றலுமிறத்தலுங்காப்பும்
அனையவாசுதேவன்வயிற்பெற்றவன்றனக்கே
தனுவுமாகியதன்மையாற்சகலமாஞ்சகமும்
புனிதமாயனேயென்றொருபொருள்கொடுபுகலும்

மேனிதனினையுருவாயிரனைவிளம்புமோவென்னில்
மானிலத்தினிற்றகுந்தகாயமானத்தால்
யானினைத்தவென்பருந்தவெனவென்பதுபோலத்
தேனமருந்திருமாலையுருவசுமெனச்சொலுமால் (யஎ)

பஞ்சராத்திரமறைப்பொருளாகியபடியால்
செந்தெனொன்மாமறைசெப்பியநிமித்தகாரணனும்
வஞ்சிபோல்லிடைக்கிருந்தகக்குழலையாட்பயிலே
நஞ்சரவணைத்துயினாராயணனன்றே. (யஅ)

௧-வது-ஐயத்காரணத்துவவிவரணப்பரிச்சேதம்.

துணையமருதமசல்யுபாதானகாரணனும்
இயனிமித்தகாரணனுமாகியதெங்ஙனென்றால்
உயரணைகளெலாமேற்கவுருவஞ்சுனளற்றெரியுந்
துயர்வுநீங்கவுமுத்தரித்தோதுவெவனாதுகேள். (க)

சிலந்திதன்னிடத்தினின்னூலினைச்செலுத்திப்
பலிந்தநூல்யம்மைப்பொரிக்கக்கொளும்படிபோல்
பொலிந்தநாராயணனிடத்தினிற்புவனங்களெல்லாம்
மலிந்துதோற்றமுமாய்க்குமுப்பெறுமெனுமறைகள்

நீதிவேதங்களொருவனேநிமித்தகாரணனும்
ஓதுசிருபாதானகாரணனுமென்றுரைத்துப்
பேதமின்மையுந்தெளிவுறவிளக்குமப்பேச்சுக்
காதரத்துடன்புராணமிட்டரந்தமுமாகி. (௩)

நேரிலாதசீர்நிமித்தகாரணனுபாதான
காரணத்தவுமைக்கண்ணனேவிளங்கிநிக்காட்டி
சீரிதானதந்தகசம்பந்தமென்பதனைப்
பாரின்மேற்சொலும்பாகவதாதியாம்புராணம். (௪)

௨-வது-பீதாம்பரனைப்பிறப்பிலியென்றபரிச்சேதம்.

ஈதுநிற்கநாராயணைவுப்பீடதத்தில்
பேதையேபிறவாதின்றபிரமனைப்பரிவால்
ஓதுசீர்புனையுருத்திரசத்தவாச்சியனும்
ஆதிநாரணனவித்தனனென்னுமப்பொருளே. (க)

நீலகண்டனுமுருத்திரனிடத்திலேநிறைந்த
கோலமாமலராயன்பிறந்தானெனக்கொண்டாய்

ஓலவேலைசூழ்பூதலமோடதிமேலே
எலவேழுமுளைப்பதுதனைக்கண்டபேரியாரே. (உ)

நாரிடாகத்துநான்முகனிடத்திறைப்பத்தி
பாசமாமறைப்பலபடப்பகருகையாலும்
கோலமால்வயிற்பிறப்பிலுங்குளிர்மலாயத்து
நீலகண்டனையினவலாய்நிகழ்த்துகையாலும். (௩)

பெருத்தகற்பபேதங்களிற்பிரமனிடத்தும்
உருத்திரற்குபர்மறைபிறப்புரைக்கையிறாலும்
...ரத்திறனும்பர்பிதாமையுமூன்வனன்றனையும்
உரித்தடங்காமுடப்பக்கனொன்றாகவும்வழகாக. (௪)

ஈதலாலுசத்தர்சலத்தாற்பொருளிசைந்தால்
மாலுமேனியபங்கிதன்மலர்வனிடத்தில்
சாதமானதுவெளிப்பெறப்பலபடச்சாற்றும்
வேதவாசகத்தகைகிறுவிரோதமாய்விடுமே. (௫)

இவனிடத்துமாலயனிவர்சனித்தமைசெப்பும்
சுவாதிலாதவிலிங்கபுராணத்துத்தானே
துவமதாகமுன்சொன்னசொற்கண்டமைதோற்ற
பவலமாவிடத்தானயன்பிறந்ததுபகரும். (௬)

அன்றியப்பெரும்புராணமூர்த்தாமதமதலால்
ஆன்றமாமறையரிதனக்குற்பவன்சொ... து
நின்றசாத்திகப்பலபுராணங்களினறி... ம்
மென்றிவற்றுயிம்மொழிவிரோதமாயவிளையும். ௭

தருஇமாலயனெனுமிவர்சரீரங்கண்மாறிப்
புருதியும்பழப்பாழிமேபுரிந்தனரல்லால்
திகழொருத்தருக்கொருத்தர்சென்மித்திலரென்றே
தொகுத்தயாவொருமகேத்திரசாலமுஞ்சொன்னாய். (௮)

நாரணன்வயிறான்முகன்பிறந்திலனென்று
பாரிடத்திலோர்சத்தியம்பகர்வதேயானால்
சாரமானவச்சகலவேதாந்தசாத்திரமும்
சீரிதன்றெனவேற்றுநூற்செய்யவேண்டிடுமால். (௯)

அயனிடத்திலேபிறந்ததுகொண்டதோக்கனென்
றியலுமாசமதேயம்படைத்தானெனவிசைத்தாய்
பயனதாகியப்போக்கசசத்தமாம்பதத்துக்
குபருதன்பொருளுள்ளவாறிங்கெடுத்துரைக்கின். (௰)

படலம்.

உரைசெறிந்தவைப்புலன்கள்கொண்டொருவராலறிய
அரிதெனப்படுநீடெட்டாக்கயோகர்க்குத்
திரமதானவுங்கோக்கிரந்தெரிசனஞ்செய்ய
ஒரியதென்பதுநாமநிச்சயத்தினிலுரைக்கும். (௰௧)

தெய்த்தவேல்விழிவல்லியேயித்திறநிற்ப
மூத்தர்போற்றுமாபாரதமோட்சதன்மத்தில்
உத்திரருநூற்றறுபதோடொன்பதாய்நின்ற
அத்தியாயம்மாதியவெழுகாணவாசகத்தில். (௰௨)

பொருவின்ஞானசம்பூரணராற்றியானிக்க
உரியதுலகையாலோதாழ்ந்பத்தியுங்கடரும்
பருவிடாதவுலகையான்பவட்டடாவையிருள்
அரிதலககமோக்கசட்பெயர்வந்தெதன்றனமக்கும். ௰௩

அனையதன்மைநாராடணனென்றதத்துவமேடல்
சனனமங்கலன்றனைகிலேபோவெனச்சாற்றில்
வினையிலாவவன்பிறப்பிலாதிருக்கவும்வெருவாய்ப்
புனிதம்லாகமேற்றேற்றுமென்றுயர்மறைபுகலும் ()

அன்னவாறுமாவிச்சையாலவதரித்தருளும்
பின்னைநேரிடையாயதின்விபரமேலுரைப்பேன்
மன்னுநான்முகன்மாவிடைப்பிறந்திலனென்று
சொன்னசொற்குமாறுத்தரம்பெறும்படிச்சொலக்கேள்.

௫-வது-ஐம்முகனயன்மகனென்றபரிச்சேதம்.

மைபூர்ந்தசெஞ்சொனூராடைவுபநிடந்தானிம்
மொழிந்தசீர்புனைபுருடசூத்திரமுதலாகப்
பொழிந்தமாமறைசகலமும்புனிதமாவிடத்துச்
செழுந்தவத்தயன்பிறந்ததோரிடத்திலேசெப்பும். ()

அந்தநூன்பொருட்கிசைதரச்சுனைப்புயத்தோன்
சிந்தனன்னிமேயத்திரந்தனில்வாசகினிற்செவியில்
மூந்துறாசியினண்டத்திறுமுண்டகத்தின்
கத்தமேபெழுகாலைபெற்றனனென்றே. (௨)

வாக்கின்வந்தனமட்டெலாந்துதிசெய்துவாழ்த்தித்
தேக்கமழ்ந்தபூம்பொன்னடிபணிந்துளதெய்லக
ஆக்கமாகியபாரதந்தனிலயக்கிரீவோ
பாக்கியானமாம்பனுவலில்வெளிப்பெறப்பகரும். (௩)

பூதநாளுடனொன்றையமாயையின்புணர்ப்பால்
ஏதமிலா நிச்சயவொழுக்கமெய்வத்தைநிசகத்துக்
காதிகிட்டியிலெனையன்றேவலித்தனையென்ன
வேதன்மாயனைப்புகழ்ந்ததுஞ்சொல்லும்வான்மீகம் (௪)

ஈகத்தலமாண்டிருந்தசாதகுமாரனேநின்பால்
மிகுத்தநீதருமபுதல்வனுப்விளங்கியவிறலான்
முகத்ததம்மைவந்தனைனைத்தெல்திசைமுதல்வன்
வகுத்தளதாத்தமைவிளம்புமுத்தரவிராமகதை (௫)

பரவுவின்றெவின்புராணநற்பாகவதாதி
திரமதாப்பலபுராணமுஞ்சிறந்தசோதிடமாய்
விரவபாணுசித்தாந்தநூன்முதலவும்விரிஞ்சன்
உரமசயிபாற்பிறந்ததுசொலாதநூலும்தா. (௬)

வேதம்மாலிடைப்பிறந்ததைமேலுநானுரைப்பேன்
ஈதுநிர்க்கரம்பிறவன்கண்ணிருளிடத்தில்
சாதமொடிருக்கையெலாஞ்சனித்துநிமத்
நீநிலாதநெறிநிலைபதியானத்தலமென்றும். (௭)

பெருசநற்புனல்வெளியால்பிறப்பிலானென்றும்
பரிசரிக்கநீமயத்தினைவருத்தமும்பட்டாய்
விரவிலாப்பயிடமெத்தனைவிளக்கியபோதும்
சுருசமித்தனைதராவிமேற்றமணியமாமோ. (௮)

மூக்குநெறிநிலைத்தியானமாத்தலமெனமொழிந்தால்
அந்தநெறிநிலையன்றியானித்ததேபோல
இந்துமாலினையேபாசபராயிறுமெல்லாம்
சந்ததந்தியானிப்பதுதனைத்தவிர்த்திடாரே. (௯)

நினைவிலப்படியேதியானிப்பவர்க்கெல்லாம்
இனியவெண்மதிச்சடையனுந்தோன்றிடாதிரானே
இனையதன்மையாநீரேற்றலானதுகொண்டே
புனிதநான்முகத்துருத்திரன்புதல்வனும்போது. (௰)

மிக்கநான்முகன்மகன்சிவனென்றவேதங்கள்
தக்கயோகியர்க்குஞ்சுதனென்றுசாற்றுவோர்
மைக்கணுபதுநிற்கரும்மழுவலான்பிறக்கப்
புக்கநெறிநிலைத்தியானமாத்தலமெனும்போது. (௰௧)

போற்றுமந்தநான்முகன்றிருத்தொடையிலேபுகழ்சேர்
ஏற்றுவாகனத்துருத்திரன்பிறந்தனளவியல்பும்
தேற்றமானசீர்விண்டுவின்புராணநூன்மறையச்
சாற்றுமத்தொடைதானுநீடியானநற்றலமே. (௰௨)

நீலவேல்விழிவல்லியேயிவையெலாநிற்கப்
பலர்லாசனன்பங்கயன்பாற்பிறந்தமையும்
ஏழுமூக்கணனான்முகனென்னும்பவ்விருவோர்
மாலிடத்துதித்தொடுங்குவரோர்நாற்பவமுழக்கும். (௰௩)

பன்றுமிங்கிவர்பகுதிசம்பந்தமொன்பதுவும்
மன்னுகன்மவசத்தரேயென்றிடுமறைகளும்
உன்னுமிச்சையாற்பிறந்திலரொன்றுமூர்த்தராம்
அன்னமேயுரைக்கின்றனவனுதிகொண்டதுகேள். (௰௪)

௩-வது-மூவர்முகுந்தனிடத்திலுற்பத்திப்பரிச்சேதம்

நிறப்புண்டரீகமலர்ப்பிரமாவுக்குநீண்டசடைச்சிவனுக்குநிலைமையான பிறப்புண்டென்பதுதன்னையிருக்குவேதம்பேசியதுசரசமலர்ப்பீடந் தன்னில்,சிறப்புடைதிருமாதின்மங்கைதன்மைசெப்புமிடத்திலின்று ன்னைதெளிவிலார்க்கும்,குறிப்புண்டாகப்பகர்ந்தேன்பவளச்செவ்வாய் க்குவளைவிழித்தவளநகைக்கோதைநல்லாய். (க)

அம்புவியுமாருதமும்புனலுந்தீயுமாகாயப்பரப்பும்போய்அண்டத்தா னும், உம்பருமபோய்மாண்டிறந்த வூழிகாலத்தோங்குமரியொருவனு மேயுளனாய்நின்றான், பம்பியசீர்புனைந்திடுமவ்வரிதன்னுடையபங்கயத்து ன்முகனுற்பவித்தானந்தச், செம்பதுமத்தான்பெற்றான்சிவனையென்று தெளிவாகவெகுவிருக்கிற்செப்புமன்றே. (உ)

